*(வலைபின்னல் மாற்றுமுறை)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## *1999 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவக (திருத்தம்)*

*(1999 ,ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*1999, ஏப்பிறல் மாதம் 9 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 4.00 தபாற் செலவு : ரூபா 3.50

**1999 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவக (திருத்தச்) சட்டம்**

*1999 ஏப்பிறல் மாதம் 9 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*ச.வ.- ஓ.8/97.*

**1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

**1.** இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவக (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். *கருக்கப் பெயர்.*

**2.** இதனகத்துப்பின்னர் “ முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும், 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க, இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

“(ஈ) இலங்கை அல்லது வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களினால் அல்லது தனியாட்களினால், இலங்கைக்கு இயைபான சமூக, பொருளாதார ஆராய்ச்சி நடாத்தப்படுதலுக்கு ஒழுங்கு செய்தல் ;”

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவின் (4) ஆம், (5) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :-

“(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி நிறுவகத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும். அத்தகைய கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் அவருக்கு உதவி செய்யும் நோக்கத்திற்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி

(இதனகத்துப் பின்னர் "கணக்காய்வாளர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தகைமை வாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரின் சேவைகளை ஈடுபடுத்துதல் வேண்டும்; அவர் கணக்காய்வாளர் தலைமையதி பதியின் பணிப்பின் கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

அத்தகைய கணக்காய்வானது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக நடாத்தப்படுதல் வேண்டும்."

(5) நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் அவரால் உறப்பட்ட செலவுகளைச் சமாளிக்கும் நோக்கத்திற்காக, கணக்காய்வாளர் தலைமையதிபதி, நிறுவகத்தின் நிதியத்திலிருந்து, சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தைச் செலுத்துதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நிறுவகத்தின் நிதியத்திலிருந்து பெறப்பட்ட ஏதேனும் ஊதியம்,அதிலிருந்து அத்தகைய கணக்காய்வை நடாத்தும் நோக்கத்திற்காக அவரால் ஈடுபடுத்தப்பட்ட கணக்காய்வாளருக்கு அவரால் செலுத்தப்பட்ட ஏதேனும் தொகையைக் கழித்ததன் பின்னர், திரட்டிய நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்."

(2) அப்பிரிவின் (10) ஆம் உட்பிரிவில் "கணக்காய்வாளர்" என்னும் சொல் அவ்வுட்பிரிவில் இடம்பெறும் இடங்களிலெல்லாம், "கணக்காய்வாளர் தலைமை யதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவில் "கணக்காய்வாளர்" என்னும் சொல்லுக்குப் பதிலாக, "கணக்காய்வாளர் தலைமையதிபதி" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

4. இச்சட்டத்தின் சிங்கள,தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*